அன்றைக்கு, நான் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறுக்கிட்டுவிட்டார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாடலை அன்றைக்குச் சொல்ல மறந்துவிட்டேன். இன்றைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடினார், மாண்புமிகு ஞானசேகரன் அவர்களே, “என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்” *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சொல்லியிருக்கிறார் என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறார். தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி, கூட்டுறவுத் தேர்தலை நடத்தித் தரவேண்டும், விவசாயிகளுக்கு incentive தர வேண்டும் என்கிற என்னுடைய கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையை நாளை காலையிலே வைத்துக்கொள்ளலாம்.

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை *(18-3-2005)* வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை, *(18-3-2005)* வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 மார்ச் 17

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (18-3-2005) வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-3-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

56. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

57. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் முப்பத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

58. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

71. மானியக் கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)